[2019 ஜூலை 18

(ஈ) பழங்குடியின மக்களுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளுடன் வீடுகள் கட்டுதல், பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளைத் தரம் உயர்த்துதல், ஆதி திராவிடர் மக்களுக்கு சமுதாயக் கூடங்கள் கட்டுதல் தொடர்பான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *1. அனைத்து பழங்குடியின மக்கள் சொந்த வீட்டில் குடியிருப்பதை உறுதி செய்ய வீடுகள் கட்டித் தருதல், அவர்களின் குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி ஏற்படுத்தித் தருதல், இணைப்புச் சாலைகள் மற்றும் பாதைகள் இல்லாத இடங்களில் இணைப்புச் சாலை மற்றும் பாதை அமைத்துத் தருதல், தெரு விளக்கு மற்றும் சூரிய மின் விளக்கு வசதி ஏற்படுத்தித் தருதல் ஆகிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் முதற்கட்டமாக 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தித் தரப்படும்.* (மேசையைத் தட்டும் ஒலி)

2. பழங்குடியின மாணவ, மாணவியர்களின் இடைநிற்றலைத் தவிர்க்கவும், பள்ளிக்கு வெகு தூரம் செல்வதைத் தவிர்க்கவும், அவர்தம் குடியிருப்புகளுக்கு அருகில் உள்ள பள்ளிகளைத் தரம் உயர்த்துதல் அவசியமாகிறது. நடப்பு கல்வியாண்டில் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள எழுத்தூர் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகவும், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள "பாச்சேரி", திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள "அரசவெளி" மற்றும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள "பொக்காப்புரம்" ஆகிய 3 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள "இன்னாடு" அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் 6.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிலை உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. ஆதி திராவிட மக்கள் தங்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளை அனைத்து வசதிகளுடன் மகிழ்ச்சியாகவும், மிகச் சிறப்பாகவும் கொண்டாடும் வகையில், மதுரை மாவட்டம்–கே.புளியங்குளம், கரூர் மாவட்டம்–வாங்கல் குச்சிபாளையம், தருமபுரி மாவட்டம்–காரிமங்கலம், நாமக்கல் மாவட்டம்–82 கவுண்டம்பாளையம், திருநெல்வேலி மாவட்டம்–ரெங்கசமுத்திரம் ஆகிய 5 கிராமங்களில்,

2019 ஜூலை 18][திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

அனைத்து வசதிகளுடன்கூடிய 5 சமுதாயக் கூடங்கள், தலா 1 கோடி ரூபாய் வீதம், 5 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. விதி 110–ன்கீழ் முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதுக்கோட்டை நகராட்சி மற்றும் விருதுநகர் நகராட்சி நூற்றாண்டு விழா, எடப்பாடி நகராட்சி மற்றும் பட்டுக்கோட்டை நகராட்சி பொன் விழா ஆகியவற்றை முன்னிட்டு சிறப்பு நிதி ஒதுக்கி அடிப்படைத் தேவைகளை மேம்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் சிறப்பாகச் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், அம்மா அவர்கள் அறிவித்த திட்டங்களை மட்டுமல்ல, மக்களுக்குத் தேவையான திட்டங்களை அறிவித்து, இன்று மக்களின் சிறந்த முதல்வராகத் திகழ்ந்து வருகிறார்கள்.*

விழுப்புரம் நகராட்சியில் நடக்கவிருக்கும் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, நகராட்சியின் அடிப்படைத் தேவைகளை மேம்படுத்திட சிறப்பு நிதியாக 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி அறிவிப்பு வெளியிட்டதற்கு எனது மனமார்ந்த நன்றியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் நகராட்சியில் 1–10–2019 அன்று நடக்கவிருக்கும் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், விழுப்புரம் நகராட்சிக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 50*